மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவைகுண்டம்

2026 ம் ஆண்டு ஜுன் மாதம் 04–ம் நாள் வியாழக்கிழமை

அ.வ.எண்.204/21

வா.சா.1

சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டின் ஆணையுறுதி சட்டத்தின் வகைமுறைகளின் கீழ் (44 வது சட்டம்) திரு.எம்.ஹரிராமகிருஷ்ணன்,M.A.,M.Phil.,L.L.M., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதிகூறி வைக்கப்படுகிறது.

---

| | |
|---|---|
| பெயர்: ராமலிங்கம் | தேதி : 04.06.26 |
| வயது : | த/பெ : ஈஸ்வரமூர்த்தியாபிள்ளை |
| கிராமம் : | தொழில் : |
| | மாவட்டம்: |

---

<u>04.06.26 குறுக்கு விசாரணை</u>

1.நான் விவசாயம் செய்து வருகிறேன். என் மகன் ராணுவத்தில் உள்ளார் என்றால் சரிதான். தபசில் சொத்தின் சர்வே எண் 1589/1A என்று வழக்கில் குறிப்பிட்டுள்ளோம் என்றால் சரிதான். நான் 9 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நன்றாக எழுத படிக்க தெரியுமா என்றால் ஓர் அளவு தெரியும். என்னிடம் காண்பிக்கப்படும் பட்டா எண் 2248 தாவா புல எண்1589/1A க்குரியது என்றால் சரிதான். அது பி.சா.ஆ 1 ஆகும்.

2.பி.சா.ஆ 1ல் கண்ட மற்ற கூட்டு பட்டாதாரர்களான லெட்சுமி அம்மாள், காசி விஸ்வநாதன், மீனாட்சி ஆகியோரையோ அவர்களது வகையாட்களையோ கட்சி சேர்க்கவில்லை என்றால் சரிதான். பி.சா.ஆ 1ல் புஞ்சை என்று காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் பூமியில் மனையாகவும், வீடுகளாகவும் உள்ளன. நீதிமன்ற ஆணையர் தபசில் சொத்தினை அளந்து அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். ஆணையர் அறிக்கை

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.06.04 15:44:15 +0530

நீ.ம.சா.ஆ1 ஆகும். ஆணையர் வரைபடம் நீ.ம.சா.ஆ2 ஆகும். ஆணையர் தாக்கல் செய்துள்ள நில அளவையர் வரைபடம் நீ.ம.சா.ஆ 3 ஆகும்.

3.ஆணையர் அறிக்கையுடன் புல எண் 1589/1A க்குரிய பட்டாவினை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். எங்கள் வீட்டு வாசல் கிழக்கு பார்த்துதான் உள்ளது என்றால் சரிதான். எங்கள் வீட்டுக்கு முன் தென்வடலாக தெரு உள்ளது என்றால் தெரு உள்ளது. அது பட்டாதாரர்கள் பெயரில் உள்ளது. அந்த தெரு பட்டாதாரர்கள் பெயரில் உள்ளது என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

4.புல எண் 1589/1A தெருவாக உள்ளது என்பதற்கு வருவாய்த்துறை ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வருவாய்த்துறை ஆவணத்தில் பட்டாதாரர்கள் பெயரில் தான் உள்ளது. 1, 2 பிரதிவாதிகள் சொக்கலிங்கம் பிள்ளை வகையறாவிடம் சொத்து வாங்கியவர்கள் என்றால் சொக்கலிங்கம் பிள்ளையிடம் மட்டும் வாங்கியுள்ளனர். பி.சா.ஆ1ல் சொக்கலிங்கம் மனைவி மீனாட்சி பெயரும் உள்ளது என்றால் சரிதான்.

5.நான் சொக்கலிங்கம் பிள்ளை வகையறாவிடம் சொத்து எதுவும் வாங்கவில்லை என்றால் சரிதான். ஆனால் புல எண் 1589/1A ல் நடந்து கொள்ள எனக்கு உரிமை உண்டு என்று லெட்சுமி அம்மாள் கணவர் பிச்சைபிள்ளை அவரது மகளுக்கு எழுதிக்கொடுத்த உயில் ஆவணத்தில் சொல்லியுள்ளார். மேற்படி உயில் குறித்து அதில் சொல்லப்பட்டுள்ள பாதை உரிமை குறித்து வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.06.04 15:44:20 +0530

6.பிச்சைபிள்ளை எழுதிக்கொடுத்த உயில் ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வழக்குரை மற்றும் நிரூபணவாக்குமூலத்திற்கு நான்தான் விபரங்கள் சொன்னேன். இவ்வழக்கில் பொது மக்களுக்காக பரிகாரம் கேட்டு சட்ட நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. வழக்குரையில் சுடலைவீர பாண்டியன், சிவகாமி ஆகியோருடன் நான் மட்டும் தான் வாதிகளாக உள்ளேன் என்றால் சரிதான்.

7.சுடலைவீர பாண்டியன் என் மகன், சிவகாமி என் பக்கத்து வீட்டுக்காரர். அவர் எனக்கு என்ன உறவுமுறை என்றால் சொந்தம் கிடையாது. அவரை இவ்வழக்கில் சாட்சியாக விசாரிக்க தயாரா என்றால் ஆம். வா.சா.ஆ1 சிவகாமிக்கு தனுஷ்கோடி எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் இவ்வழக்கு சொத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. பி.சா.ஆ 1ல் கண்ட நபர்கள் சொக்கலிங்கம் வகையறாவினரிடம் கிரையம் வாங்கிய நபர்கள் அல்ல என்றால் சரிதான்.

8.22.11.2018ல் சுடலைவீர பாண்டியனுக்கு வா.சா.ஆ2 ஐ எழுதிக்கொடுத்த முத்துலெட்சுமி என்ன உறவு என்றால் என் மனைவியின் தங்கச்சி ஆவார். சுடலைவீர பாண்டியன் மற்றும் முத்துலெட்சுமி ஆகியோர் சொக்கலிங்கம் பிள்ளையிடம் இருந்து கிரையம் வாங்கிய நபர்கள் கிடையாது என்றால் சரிதான். வா.சா.ஆ1, 2 ஆவணங்களை சொக்கலிங்கம் பிள்ளை வகையறாவிற்கு பாத்தியப்பட்ட பி.சா.ஆ 1ல் கண்ட சொத்தை அபகரிப்பதற்காக ஏற்படுத்தி உள்ளோம் என்றால் சரியல்ல.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.06.04 15:44:24 +0530

9.வா.சா.ஆ 1, 2 ஆவணங்களை தவறான 4 மால் எல்கைகள் அடிப்படையில் ஏற்படுத்தியுள்ளோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ 3 வில்லங்கசான்றிதழில் சொக்கலிங்கம் பிள்ளை வகையறாவிடம் எங்கள் வகையறாவினர் கிரையம் வாங்கியதாக எந்த பதிவும் இல்லை என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கக்படும் வா.சா.ஆ 4 ல் இளம் பச்சை நிறத்தில் காண்பிக்கப்பட்டுள்ள பகுதிதான் புல எண் புல எண் 1589/1A என்றால் சரிதான்.

10.எங்கள் மீது 1, 2 பிரதிவாதிகள் தட்டப்பாறை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தனர் என்றால் சரியல்ல. 1, 2 பிரதிவாதிகளை அச்சுறுத்துவதற்காக வா.சா.ஆ 5 ல் கண்ட புகார் மனுவினை கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ 6 புகைப்படம் எந்த உரிமையும் ஏற்படுத்தாது என்றால் சரியல்ல. அது சட்டப்படியானது கிடையாது என்றால் சரியல்ல. நான் பிரநிதித்துவ நிலைமையில் வழக்கு தாக்கல் செய்யாததால் தாவா வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

11.தாவா தெருவில் உள்ள மற்ற நபர்களுக்கு தாவா சொத்து 1, 2 பிரதிவாதிகளுக்கு கிரையம் கொடுத்த வகையறாவினருக்கு பாத்தியம் என்பது தெரியும் என்பதால் தான் மற்ற நபர்களை கட்சி சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. நான் ஏழை குடும்பத்தை சேர்ந்தவராக சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல. என் மகன் ராணுவத்தில் உள்ளதையும், உறவினர்கள் காவல் துறையில் உள்ளதையும் பயன்படுத்தி 1, 2 பிரதிவாதிகளுக்கு எதிராக பொய் புகார்

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.06.04 15:44:27 +0530

கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. தபசில் சொத்தினை நாங்கள் ஒரு போதும் பயன்படுத்தியது கிடையாது என்றால் சரியல்ல.

12.பி.சா.ஆ1 பட்டாவில் கண்ட பட்டாதாரர்கள் காலியாக விட்டுள்ள இடத்தை பாதை என்று தவறாக உரிமை கோருகிறோம் என்றால் சரியல்ல. என் வீட்டு முன்பில் இருந்து பிராதன சாலைக்கு வர எனக்கு பெரிய அளவிலான பாதை உள்ளதை மறைத்து தாவா வழக்கினை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. சொத்து விபரத்தில் மேற்படி எங்கள் வீட்டு முன்பு உள்ள பாதை விபரத்தை மறைத்துள்ளோம் என்றால் சரியல்ல.

13.வழக்குரையில் எங்கள் வீட்டினை சொத்து விபரத்தில் குறிப்பிடவில்லை என்றால் ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள ஆவணம் வழக்குரையில் துலங்காததால் என்னுடைய சாட்சியம் பொய் சாட்சியம் என்றால் சரியல்ல. நான் பிராதில் சொல்லியுள்ளவாறு ஆடு, மாடுகள், வண்டி ஆகியவை வழக்கு சொத்தில் கொண்டு செல்ல வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. நாங்கள் காலம் காலமாக எங்கள் வீட்டிற்கு கிழக்கு பக்கம் உள்ள தென்வடல் பாதையை தான் பயன்டுத்தி வருகிறோம் என்றால் சரியல்ல.

15.சொக்கலிங்கம் பிள்ளை வகையறாவிடம் நாங்கள் வழக்கு சொத்தை கிரையம் கேட்டோம் என்றால் சரியல்ல. அதற்கு 1, 2 பிரதிவாதிகள் தான் காரணம் என்று கருதி அவர்களுக்கு எதிராக தாவா வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. தாவா சொத்து பொதுப்பாதை கிடையாது

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.06.04 15:44:31 +0530

என்றால் சரியல்ல. எவ்வித உரிமையும், அனுபவமும் இல்லாமல் வழக்கு சொத்தினை பொறுத்து நாங்கள் கோரியுள்ள விளம்புகைப்பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா வழக்கிற்கு வழக்குமூலம் கிடையாது என்றால் சரியல்ல. தாவா வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

HARIRAMAKRISHNAN
Digitally signed by HARIRAMAKRISHNAN
Date: 2026.06.04 15:44:34 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி ,
ஸ்ரீவைகுண்டம்.